எனது வாழ்க்கையே எனது செய்தி

# காந்தீயம்

ගාන්ධීයම Gandheeyam

அகில இலங்கை காந்திசேவா சங்கத்தின் இரு திங்கள் வெளியீடு

Publication of All Ceylon Gandhi Seva Sangam Regd No.S.159 0f 25.08.1965

மலர் – 33 இதழ் 02 ஒக்டோபர் – நவம்பர் – 2019 விலை ரூபா 20/=

# மகாத்மா காந்தியின் 150வது பிறந்த தினம்

## பாபுவின் நினைவில் உலகம்



மகாத்மா என பாசத்துடன் அழைக்கப்படும் பாபு, இந்தியாவின் சுதந்திரப் போராட்டத்தின் முக்கிய கதாநாயகர்களில் ஒருவர். அவர் அஹிம்சையின் மீது அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டவர். சுதந்திரத்திற்கான அவரது போராட்டத்தில் அதே அனுகு முறையை அவர் கையாண்டார். மகாத்மா அரசியல் சுதந்திரத்திற்காக மட்டும் போராடவில்லை. சாதி, மதம் பொருளாதார நிலை மற்றும் ஆண், பெண், பாகுபாடற்ற சமூகத்தினைக் கொண்ட சுயமாக பராமரிக்கக்கூடிய ஒரு தேசத்திற்காகவும் அவர் போராடினார்.

அந்த மாமனிதரின் 150 அவது பிறந்த தினக் கொண்டாட்டங்கள் அக்டோபர் 2, 2018 அன்று முதல் ஆரம்பமாகின. அமைதி, பணிவு மற்றும் ஏற்பு ஆகிய அவரது செய்திகளை பரப்பக்கூடிய வகையில் பல்வேறு நிகழ்ச்சிகளை இந்திய அரசாங்கம் திட்டமிட்டு நடத்தியது. அவற்றில் காந்தி பற்றிய படங்களைத் திரையிடுதல், நாடு முழுவதுமான சுகாதார இயக்கம், மகாத்மாவின் தத்துவங்களைச் சித்தரிக்கும் தெருக்கூத்துகள் என்பன அடக்கம்.

அந்தக் கொண்டாட்டங்களின் சிறப்பம்சங்களில் ஒன்றாக காந்திக்கு மிகவும் பிடித்த பஜனை பாடல் ஆகிய "வைஷ்ணவ் ஜன்டோ டேனே காஹியே" மூலம் மகாத்மாவுக்கு அஞ்சலி செலுத்தும் இசைக்கலவை வெளியீடாகும். 150 இற்கும் மேற்பட்ட நாடுகளிலிருந்து வந்திருந்த இசைக் கலைஞர்கள் அந்தப்பாடலுக்கு குரல் கொடுத்தார்கள். "வைஷ்ணவ் ஜன் டோ டேனே காஹியே" என்பது 15 ஆவது நூற்றாண்டைச் சேர்ந்த நரசிம்ம மேத்தா என்ற பாடலாசிரியரால் இயற்றப்பட்ட ஒரு குஜராத்தி பாடலாகும். அது பாபுவின் விருப்பத்திற்குகந்த பஜனைகளில் ஒன்றாகும். அவருடைய நாளைத் தொடங்குவதற்கு முன் வழக்கமாகப் பாடப்படும் பிரார்த்தனைகளின் பட்டியலில் இதனையும் மகாத்மா காந்தி அவர்கள் சேர்த்திருந்தார்.

2018 அக்டோபர் 2ம் நாளன்று மாலை உலகம் முழுவதிலுமுள்ள மகாத்மாவின் நினைவுச் சின்னங்கள் அவரது செய்தியான சமாதானம் மற்றும் ஒருங்கிணைந்து வாழ்தலையும் மற்றும் இன்றைய உலகில் அவற்றின் பொருத்தத்தையும் வலியுறுத்தும் விதமாக வண்ண விளக்குகளால் ஒளியேற்றப்பட்டன. ஒரு புதிய முயற்சியாக, இங்கிலாந்தின் பிக்காடிலி சர்கஸ் மற்றும் பெர்லினின் பழைய குடியிருப்பு நிகோலை வீர்டெல் போன்ற வரலாற்று அடையாளங்கள் உட்பட உலகளவில் உள்ள 120 இடங்களில் மகாத்மாவின் வாழ்க்கை மற்றும் அவரது போதனைத்துளிகள், கண்கவர் எல்இடி காணொளி நிழற்காட்சிகள் மூலமாக காண்பிக்கப்பட்டன.

இலங்கையில் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் அகில இலங்கை காந்தி சேவா சங்கம் காந்தி ஜெயந்தி ஆண்டை உணர்வுபூர்வமாக அனுஷ்டித்தது. காந்தி திருவுருவச் சிலைகளில் அஞ்சலி, ஜெயந்தி தினக் கூட்டங்கள், பத்திரிகை வெளியீடு, மரநடுகை, மாணவர் மத்தியில் பேச்சு, கட்டுரைப் போட்டிகளை நடத்துதல் போன்ற செயற்றிட்டங்களை முன்னெடுத்தது. யாழ் இந்திய துணைத்தூதரகம் சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு காந்தி 150 நினைவு ஈருருளிப் பேரணி, மரநடுகை, சைவ உணவு காட்சிக் கூடம் முதலிய நிகழ்வுகளை ஏற்பாடு செய்திருந்தது. இந் நிகழ்வுகளில் காந்திய அமைப்புக்கள், காந்திய அபிமானிகள் பொதுமக்கள் என பெருந்திரளானோர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

**மூலம் : இந்திய தரிசனம், அக்டோபர் - டிசம்பர், 2018**

## 150ஆவது காந்தி ஜெயந்தி காந்தி நிலையத்தில்

அகில இலங்கை காந்தி சேவா சங்கம் நடத்துகின்ற மகாத்மா காந்தியடிகளின் 150ஆவது பிறந்த நாள் விழா கிளிநொச்சி உருத்திரபுரம் காந்தி நிலையத்தில் இன்றைய தினம் (02.10.2019) நடைபெறவுள்ளது. இவ் விழாவில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் இந்திய துணைத்தூதரக இரண்டாம் நிலை அதிகாரி R. Bhakta (Consul & Head of Chancery) அவர்கள் கலந்து கொள்ளவுள்ளார். காந்தி பற்றிய உரைகள், கலைநிகழ்வுகள், காந்தி 150 போட்டிகளுக்கான பரிசளிப்பு, காந்தீயம் இதழ் வெளியீடு என்பன இவ்விழாவை அலங்கரிக்க உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காந்தி மகான்

அன்பை உரத்துக் கூறி
அகிலத்தைப் போற்றியவர்
கல்வி வழியில் நின்று
கருமத்தை ஆற்றியவர்
எளிமை வாழ்வு ஒழுகி
எல்லோரையும் மதித்தவர்
பாரதம் சுதந்திரம் பெற
பாடுபட்டு உழைத்தவர்
சாதி பாகுபாடு அகற்றி
சாகாவரம் பெற்றவர்
உண்மைக்காக வாழ்ந்து
உத்தமரென உயர்ந்தவர்

*சிவரம்யா சிவநாதன்*




## மரநடுகை (ஐந்தாண்டுத் திட்டம்)

மகாத்மா காந்தி அடிகளின் 150 ஆவது பிறந்ததினமான 2019 ஒக்டோபர் 02 ஆம் திகதி வரை செயற்படுத்தும் நோக்கமாக ஐந்தாண்டு மரநடுகைத் திட்டம் உருவாகியது. இதன் பிரகாரம் மகாத்மா காந்தி அடிகளின் 147 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு முதலாம் ஆண்டுத்திட்டம் 2016 ஒக்டோபர் 02ஆம் திகதி கிராஞ்சி கிராமத்தில் அமுலாகியது.

தொடர்ந்து மகாத்மா காந்தி அடிகளின் 148ஆவது பிறந்த தினமாகிய 2017 ஒக்டோபர் 02ஆம் திகதி மரநடுகை நிகழ்ச்சி நடைபெற்றது.

இவ்விரண்டு நிகழ்ச்சிகளிலும் ஏராளமான மக்கள் ஆர்வத்துடன் பிருந்தாவனம் தோட்டத்திலிருந்து தென்னம்பிள்ளை , பனம் விதை, மலை வேம்பு, இலுப்பை, சமண்டலை, கழுகு, பலா, வாகை, வேம்பு, நாவல், ஆகியவைகளைப் பெற்றுச்சென்றனர்.

கடந்த இரண்டு ஆண்டுகளில் ஆர்வமாக வளர்த்த மரக்கன்றுகளை கட்டாக்காலி மாடுகளும் ஆடுகளும் அழித்து நாசம் செய்தன. இது பற்றி ஆய்வு செய்து கட்டாக்காலி மாடு,ஆடுகளை கட்டுப்படுத்தும் வரை மரநடுகை திட்டத்தை தற்காலிகமாக நிறுத்துவதென தீர்மானமாயிற்று.

குறித்த திட்டத்தின் கீழ் தரிவு நிலத்தின் முதலாம் ஆண்டில் 400, இரண்டாம் ஆண்டில் 500, முன்றாம் ஆண்டில் 600,நாலாம் ஆண்டில் 650, என நட்ட பனம் விதைகள் நன்றாக வளர்ந்துள்ளன. காந்தி அழகனின் 150 ஆவது பிறந்த தினத்தின் போது 1000 பனம் விதைகள் நடத் திட்டமிடப்பட்டுள்ளது.

*சோ. க. தம்பிப்பிள்ளை*
*நிறுவுனர்*
*காந்தி ஆசிரமம், கிராஞ்சி,*
*பூநகரி.*


## "காந்தீயம்" ஆசிரியர் குழு உறுப்பினர்கள்

11.08.2019 நடைபெற்ற சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் "காந்தீயம்" ஆசிரியர் குழு உறுப்பினர்களாக எம். ஷாந்தன் சத்தியகீர்த்தி , ந. கணேசமூர்த்தி, சி. சிவரம்யா, சி. நிரோசன், மு. பிறேம் குமார், ம. சுஜீவன் தெரிவு செய்யப்பட்டனர்.

## சிறப்பாக இயங்கும் காந்தி சிறுவர் இல்லம்

அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் நிர்வாகத்தின் கீழ் உருத்திரபுரம் 8 ஆம் வாய்க்காலில் காந்தி சிறுவர் இல்லம், சங்கத்தின் உபதலைவர்களில் ஒருவரும் கிளிநொச்சி இந்துக் கல்லூரி அதிபருமான கி. விக்னராஜா அவர்கள் தலைமையில் சிறப்பாக இயங்கி வருகின்றது. 24 ஆண் மாணவர்கள் இங்கு தங்கியிருந்து கல்வி கற்று வருகின்றார்கள். இல்லம் மேலும் சிறப்பாக இயங்குவதற்கு பரோகாரிகளின் ஆதரவையும் அனுசரணையையும் எதிர்பார்க்கின்றோம். நீண்ட காலம் காந்தியப் பணி செய்த சி.க வேலாயுதபிள்ளை (நீர்வேலி) அவர்கள் இதன் ஸ்தாபகர் என்பது குறிப்பிடத்தக்கது. 60 வருடங்களைப் பூர்த்தி செய்து இயங்கும் இந்நிலையம் காந்திய வழியில் மக்களை ஈடுபட வைப்பதற்கான திட்டங்களை தனது பணிக்கூற்றாகக் கொண்டுள்ளது.

## காந்தி சிறுவர் இல்ல பதிவுகள்










## சர்வோதயம் மலர்கிறது

காந்திய பார்வையில் சமூகம், பொருளாதாரம், அரசியல்
மாத இதழ்

**தனி இதழ் ரூ.20/=**
கதர் நண்பர்கள் மன்றம், காந்தி நினைவு நிதி
காந்தி அருங்காட்சியக வளாகம்,
மதுரை-625020, தமிழ் நாடு, இந்தியா.

**கிராம ராஜ்யம்**
மாத இதழ் / தனி இதழ்-18/= தமிழ் நாடு சர்வோதய சங்கம்
காந்திநகர், திருப்பூர் 641603
0421-2476133,2470062
TNSSTPR@GMAIL.COM


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது வாழ்க்கையே எனது செய்தி

# காந்தீயம்

காந்தி ஆண்டு 150, அக்டோபர் - நவம்பர் 2019



**"உடலுழைப்புச் செய்யாத ஒருவனுக்குச் சாப்பிடும் உரிமை ஏது?**
-மகாத்மா காந்தி-

## பலமடையும் காந்தியக் கோட்பாடு

உலகின் விடிவெள்ளி உத்தமர் காந்தியடிகளின் 150 ஆவது ஜனன தினத்தை இன்று உலகம் கொண்டாடிக் கொண்டிருக்கிறது. 1869 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் இரண்டாம் திகதி இந்தியாவின் குஜராத் மாநிலத்தில் பிறந்த காந்தி 1948 ஆம் ஆண்டு ஜனவரி 30 ஆம் திகதி மதவாத இனவாதத் தீயின் வடிவமாய் வந்த துப்பாக்கிக் குண்டிற்கு இரையாகும் வரை இந்திய மண்ணுக்காகவும் உலக சமாதானத்திற்காகவும் மனித மேம்பாட்டுக்காகவும் தன்னை அர்ப்பணித்து வாழ்ந்த ஒரு அற்புத மனிதன். அவர் ஒரு செய்தியை உலகிற்கு வழங்கினார். அது வேறொன்றுமல்ல அவருடைய எளிமையான வாழ்க்கை தான்.

அகிம்சையையும் சத்தியத்தையும் தனது வாழ்வில் இறுக்கமாகக் கடைப்பிடித்து வாழ்ந்ததனால் உறுதியுடன் தனது கோரிக்கைகளை அவரால் முன்வைக்க முடிந்தது. அவற்றில் வெற்றியும் பெற்றார். பிரிட்டிஷ் காரரிடமிருந்து சுதந்திரத்தைப் பெறுவதற்கு அவர் அகிம்சையை ஆயுதமாகக் கையாண்டார். மக்கள் மத்தியில் விடுதலைத் தீயை உண்டாக்கி "எங்களின் விடுதலை எங்கள் கைகளில்" என்ற உணர்வை அவர்களிடம் ஏற்படுத்தினார். உண்ணா நோன்பு, சத்தியாக்கிரகம் போன்ற அறப்போர் முறைகள் மூலம் பிரிட்டிஷ் சாம்ராஜ்ஜியத்தை நிலைகுலைய வைத்தார். அதன் மூலம் இந்தியாவின் அடிமைத்தளை அகன்று சுதந்திரம் கிடைத்தது.

காந்தி இந்தியாவின் தேசபிதா என்று அழைக்கப்பட்டாலும் அவர் உலகிற்கெல்லாம் பொதுவானவராக விளங்குகின்றார். அதனால் தான் அவருடைய பிறந்த நாளை ஐக்கியநாடுகள் சபை, சர்வதேச அகிம்சை தினமாகப் பிரகடனம் செய்துள்ளது. அவருடைய கொள்கை எக்காலத்திற்கும் எந்த நாட்டுக்கும் பொருத்தமுடையதாக விளங்குகின்றது. அதுமட்டுமல்ல காந்தியின் கல்விக் கொள்கையாகிய ஆதாரக்கல்வித் தத்துவம் இன்றைய போட்டி மற்றும் நெருக்கடி மிகுந்த உலகில் மாணவர்களுக்குத் தன்னம்பிக்கை தருவதாக அமைந்துள்ளது.

"காந்தியம் விழுதுகள் பரப்பி வேரூன்றப்பட்ட ஆலமரம் போன்றது. அதை அசைக்க எண்ணும் மானுட கலகப் பூச்சிகள் எவ்வளவுதான் முயற்சித்தாலும் வெற்றி பெற மாட்டா. மாறாக அவைகளே ஒரு நாள் அந்த ஆலமரத்தின் நிழலில் இளைப்பாற வந்து அமரும் என்பதுவே நியதி. கலகப் பூச்சிகளின் அமைதி வாழ்வுக்கு காந்தியம் அகிம்சை ஒளிபரப்பி அவற்றின் இருள் அகற்றி என்றும் அடைக்கலம் அளிக்கும்."

இவ்வாறு முனைவர் இராம் பொன்னு அவர்கள் தனது "மகாத்மா காந்தி சத்திய சோதனையில் ஒளிர்ந்த அகிம்சையின் திருவுரு" என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார். இதன் மூலம் காந்தி வழியின் மீது அவர் கொண்டுள்ள நம்பிக்கை தெளிவாகின்றது.

காகா காலேகர் அவர்கள் தனது எரிப்பிறவி என்ற நூலில் குறிப்பிடுவது போன்று காந்தியக் கொள்கை மறுபிறவி எடுக்கின்ற ஒரு தத்துவமாக விளங்குகின்றது.

எனவே அனைத்துவித அடக்கு முறைகளிலிருந்தும் விடுபடத் துடிக்கும் மக்களுக்கு கலங்கரை விளக்கமாக காந்தியக் கோட்பாடு விளங்கி வருகின்றது என்றால் அது மிகையல்ல. காந்தி 150 கொண்டாட்டங்கள் காந்தியைப் படிப்பதற்கான விளங்கிக்கொள்வதற்கான ஒன்றாக அமையட்டும்.

எம்.ஷாந்தன் சத்தியகீர்த்தி
ஆசிரியர்.

## மாமனிதர் காந்தி

இந்திய நாட்டுக்கு விடுதலை பெற்றுத் தந்தவர் மகாத்மா காந்தி. பெரியவர் பிறந்து 150 ஆண்டுகளின் நினைவை நாம் பெருமையோடு கொண்டாடுவோம்.

இவர் மேல் நாடு சென்று பாரிஸ்டர் பட்டம் பெற்றவர். ஆனாலும் அடிமைப்பட்டுக் கிடந்த இந்தியா விடுதலை பெற வேண்டும் என்பதற்காகத் தன் வாழ்நாளை அகிம்சைப் போராட்டத்திலே கழித்தார். சாதி, மதம், மொழி, நாடு என்று பாராமல் மனிதர்கள் உயர்வுக்காகவும் ஒற்றுமைக்காகவும் பாடுபட்ட காரணத்தால் உலக உத்தமர் என்று பாராட்டப்பட்டார்.

வாழ்வில் இலட்சியத்தை அடைய தொடர்ந்து பாடுபட வேண்டும்; எந்த எதிர்பார்ப்புமின்றி உயர்ந்த இலட்சியத்தை அடைய பாடுபட வேண்டும் என்று உலகிற்கு உணர்த்தினார். தன் வாழ்நாளில் எந்நேரமும் இடைவிடாது காரியங்கள் புரிந்தவண்ணமே செயல் ஆற்றினார்.

"மிருக பலத்தைவிட ஆன்மீக சக்தியே அதிக வலிமை வாய்ந்தது என்பதை ஆயுதமற்ற மக்களால்தான் நிரூபிக்க முடியும். மிருக பலமற்ற மேன்மையான மனிதன் எவ்வித ஆயுதமும் இல்லாமலேயே உலகத்தை தன் வசமாக்க முடியும் என்பதை நிரூபிக்கும் நாள் வரத்தான் போகிறது" என்ற ஆழ்ந்த நம்பிக்கையுடன் அகிலத்திற்கு அகிம்சையைப் போதித்தவர் அண்ணல் காந்தியடிகள்.

வெறுப்புக்கு மாற்றாக அன்பு, போட்டிக்குப் பதில் ஒத்துழைப்பு, தன்னலத்திற்கு எதிராகத் தியாகம், புற ஆரவாரத்திற்கு இடமில்லாத எளிமையான அகநாகரிகம் என்பவைதான் காந்திய வாழ்க்கைப் பண்புகள் பொதுவாழ்வில் நேர்மையும், உண்மையும் தான் மகாத்மாவின் முக்கிய இலக்குகள்.

ஒவ்வொருவரும் அவரவர் வேலையைத் தாங்களே செய்ய வேண்டும் என்று அவர் அடிக்கடி சொல்வது உண்டு. சொல்வதோடு நிற்கவில்லை; பெரிய தலைவராகப் பலராலும் பாராட்டப்பட்ட நிலையிலும் தனது காரியங்களைத் தானே செய்யும் உயர்ந்த பழக்கத்தை ஒருபோதும் தவறவில்லை.

காந்தி அவர்கள் ராமநாமத்தை உச்சரிக்கும் பழக்கம் கொண்டவர். இதன் மூலம் பயத்திலிருந்து வெளிவந்தார். மற்றச் சமயங்களிடம் சகிப்புத்தன்மை கொள்ள கற்றிருந்தார். அதற்கு ஒழுக்கமே மூல காரணம்; சத்தியமே ஒழுக்கத்தின் சாரம் என்பது அவர் கருத்து.

காந்திஜி எளிமையான வாழ்க்கை மேற்கொண்டவர். பகவத்கீதை நூலில் அதிக பக்தி கொண்டவர். தினமும் இரண்டொரு சுலோகத்தை மனப்பாடம் பண்ணுவார். காந்தியைப் பொறுத்தவரையில், அவரிற்கு வழி காட்டும் நல்ல துணையாக கீதை அமைந்தது.

பெரியார் காந்தி அனைவருக்கும் பொதுவானவர். அவரிம் பாகுபாடு கிடையாது. அவர் தன்னையும், இந்துக்களையும் ஒரு போதும் பிரித்துப் பார்த்ததில்லை. பிரச்சினைகளை இவர் உளவியல் ரீதியாக அணுகினார்.

காந்தியைப் பற்றி கவிஞர் ரவீந்திரநாத் தாகூர் கூறிய சில வரிகள்;

"உயிரோடு உலவும் காந்தி, ஒருவேளை தம் லட்சியத்தில் வெற்றி பெறாமல் போகலாம். மக்களை அவர்களுடைய தீய செயல்களிலிருந்து திருத்த முடியாமல் புத்தர் தோற்றதைப் போல கிறிஸ்து தோற்றதைப்போல இவரும் ஒருவேளை தோற்கலாம். ஆனால், வரும் யுகங்களுக்கெல்லாம் தம் வாழ்வை படிப்பினையாக்கிய ஒருவர் என்று இவரை மக்கள் நினைவு கூர்வார்கள்" ஆகும்.

இந்திய அரசாங்கம் காந்தியின் 150 வது ஜெயந்தி தினத்திற்கு மிகவும் சிறப்பான (150) சின்னத்தை அமைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

காந்தியடிகள் நின்றிருக்க கையில் வைத்திருக்கும் தடி எண் ஒன்றாகவும், பின்னர் இலக்கம் 5உம், பின்னர் எண் பூச்சியத்தில் நெசவு சுழலும் சில்லான "சார்க்கா" அமைக்கப்பட்டுள்ளது. எல்லோரும் நல்லவராய் காந்தியடிகள் பற்றி எண்ணி மனம் மகிழ்ந்து திருந்தி வாழ்வோம்.

**சிவரம்யா சிவநாதன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய உலகில் இன்றியமையாதது காந்தீயம்



காந்திஜி பெரிய மகாத்மா என்பதாலோ, பெரிய துறவி என்பதாலோ அவரது கருத்துக்களை இன்றியமை யாதவை என்று கூற முடியாது. காந்திஜியை விட பெரிய மகாத்மாக்களும், முனிவர்களும் இருந்திருக்கிறார்கள்.

காந்திஜி ஒரு மகாத்மா மட்டுமல்ல ஒரு போர்வீரராகவும் விளங்கினார். அவர் அநீதிக்கு எதிராக போராடி வந்தார். அநீதிகளை மனிதன் எப்போதுமே எதிர்த்து வந்துள்ளது உண்மைதான். ஆனால் அநீதியாளர் மீதும் அன்பும், கருணையும் கொண்டிருந்தது காந்தீய சிந்தனை.

அநீதியை வன்முறை மூலம் மேஜினி, கரிபால்டி, லெனின், ஸ்டாலின், மாசேதுங் போன்றோர் வெற்றி கண்டுள்ளனர். ஆனால் இன்று உலகம் மாறிவிட்டது. அறிவியலும், தொழில்நுட்பமும் ஆட்சியாளர்கள் கையில் பயங்கரமான அழிவுச்சக்தியை அளித்துவிட்டன. அவர்கள் முன்பு வன்முறையான எதிர்ப்பு நிற்க முடியாது. இன்று அநீதியை வன்முறையால் எதிர்ப்பது தோற்றுப்போகும் என்பது கிட்டத்தட்ட நிச்சயம். ஸ்ரீலங்காவில் விடுதலைப்புலிகள் இயக்கமும், ஆப்பிரிக்க ஹைதி இயக்கமும் இதற்கு எடுத்துக்காட்டுகள். எனவே இன்றைய உலகில் அநீதியை எதிர்க்க காந்தியமே ஒரே வழி. எனவே இன்றைய உலகில் இன்றியமையாதது காந்தியம்.

காந்தி இன்று ஒரு புதிய உலகம், ஒரு புதிய நாகரிகம் ஆகியவற்றின் பிரதிநிதி. இன்று உலக அளவில் போர் என்பதை விட பெரிய முட்டாள்தனம் எதுவும் இருக்க முடியாது. இன்றைய போர் அணு ஆயுதப்போராக இருக்கும். அணு ஆயுதப்போரில் எந்த தரப்புமே மிஞ்சாது. எனவே போரும், ராணுவமும் இன்று அறிவியலுக்கோ, நீதியலுக்கோ ஒவ்வாத ஒன்று.

அடுத்து இன்றைய நாகரிகத்தை எடுத்துக் கொள்வோம். நமது பூமியின் உஷ்ணநிலை 4° ஏறிவிட்டாலே மனித இனம் அழிந்துவிடும் என்கிறார்கள். சுற்றுச் சூழல்கேடு போர் அபாயத்தை விட பெரிது என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர். நாம் இயற்கையை அளவுக்கு அதிகமாக சுரண்டுகிறோம். "பூமி எல்லோருடைய தேவைகளையும் பூர்த்தி செய்யும். ஆனால் யாருடைய பேராசையையும் பூர்த்தி செய்யாது" என்றார் காந்திஜி.

ஒன்று காந்தீயத்தின் படி நாம் எளிய வாழ்வை மேற்கொண்டாக வேண்டும் அல்லது பெரும் பிரளயத்தில் அழிந்து போக வேண்டும். ஆக நாகரீகத்தின் படியும் காந்தீயம் இன்றியமையாத ஒன்று.

மூன்றாவதாக இவற்றை எடுத்துச் சொல்லி மனிதனை முழுமையான வாழ்வுக்கு ஏற்றவனாக ஆக்க கல்வி வேண்டும். காந்திஜி கல்வியுடன் உழைப்பையும், அறநெறியையும் இணைத்தார். கல்வி ஒரு மனிதனை மட்டுமல்ல, ஒரு சமுதாயத்தையே மாற்றியமைக்கும் சாசனம். இன்றைய கல்வி நிறுவனங்கள் அப்படி கல்வியைப் பயன்படுத்தவில்லை. எனவே கல்வியிலும் காந்தியம் இன்றியமையாத ஒன்று.

**பேராசிரியர். ராம்ஜி சிங்**
**முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர், பாட்னா,**
**ஹிந்தி கட்டுரையின் தமிழ் சாரம், தமிழில் : மு. ஞானம்**

# அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் தலைவராக திரு. சோ. க. தம்பிப்பிள்ளை தெரிவு



மிக மூத்த காந்திய வாதியும் சங்கத்தின் ஆரம்பகால உறுப்பி னருமான திரு. சோ. க. தம்பிப்பிள்ளை அவர்கள் 11.08.2019 ஆந் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் நடப்பாண்டு நிர்வாகத் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். காந்தியக் கொள்கைகளில் பலமான நம்பிக்கை கொண்டுள்ள இவர் காந்தி ஆசிரமத்தின் நிறுவுனர் என்பதுடன் பாராளுமன்ற ஓய்வு நிலை சமகால மொழி பெயர்ப்பாளர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# காந்தி தேவைப்படுவதற்கான 10 காரணங்கள்

"இன்று காந்தி ஏன் தேவைப்படுகிறார் என்பதற்கான பத்து காரணங்கள்" என்ற தலைப்பில் ராமசந்திர குஹா விரைவு ரயில் வேகத்தில் உரை நிகழ்த்தினார். 1. அதிகாரத்தை அகிம்சை மூலம் எதிர்த்தல். அதன் மூலம் உலக நாடுகள் பலவற்றுக்கும் மார்ட்டின் லூதர் கிங் உள்ளிட்ட பல அகிம்சைப் போராளிகளுக்கும் வழிகாட்டியாகத் திகழ்வது. 2. இந்தியாவின் நிறைகளை அடையாளம் கண்டதுபோல் குறைகளையும் அடையாளம் கண்டு அதைக் களைய முயன்றது. இந்த வகையில் தேசத்தின் கடந்த காலத்தைக் குறைகளற்றதாகக் கட்டமைக்கும் தீவிர தேசியவாதத்துக்கு எதிரான ஒரு குரலாக காந்தி இருந்தது. 3. மதத்தை அடிப்படையாகக் கொண்ட குடியுரிமையை மறுத்தது. எல்லா மதங்களுக்கும் உரிய நாடாக இந்தியாவை முன்னெடுத்தது. இதற்கு விலையாக தனது உயிரையே இறுதியில் கொடுத்தது. 4. பன்மைக் கலாச்சாரத்தில் விளைந்த அரசியல் பார்வையை காந்தி கொண்டிருந்தது. முதலில் இங்கிலாந்து, பிறகு தென்னாபிரிக்கா என்று புலம்பெயர்ந்த வாழ்வுதான் காந்தியை நமக்கு உருவாக்கிக் கொடுத்தது. 5. ஒரே சமயத்தில் தேசப் பற்றாளராகவும் சர்வதேசப் பற்றாளராகவும் காந்தி இருந்தார். தன்னுடைய தேசத்தை உருவாக்குவதற்காக இன்னொரு நாட்டை எதிரியாக அவர் முன்வைக்கவில்லை. 6. சுற்றுச்சூழல் மீதான காந்தியின் அக்கறை அவரது நாடி நரம்பெல்லாம் இயல்பாகவே ஊறியிருந்தது, "தொழில்மயமாதலை ஐரோப்பியா தழுவிக்கொண்டதுபோல இந்தியாவும் தழுவிக்கொண்டால் வெட்டுக்கிளிகளால் சூறையாடப்பட்ட வயல்களைப் போல ஆகிவிடும்" இந்த உலகம் என்றார் காந்தி. 7. தொடர்ந்து தன்னைப் புதுப்பித்துக்கொண்டும் வளர்த்துக்கொண்டும் இருந்தது. காந்தி முன்னே அப்படிச் சொன்னார் இப்போது இப்படிச் சொல்கிறாரே என்று கேட்டால், தற்போதைய உண்மைகளுக்குத்தான் விசுவாசமாக இருக்க முடியுமே தவிர தனது கடந்த கால வார்த்தைகளுக்கல்ல என்று பதிலளிப்பார். தன்னைத் தானே மறுத்துக்கொள்ளும் நேர்மை மற்ற தலைவர்களிடம் காண்பதரிது. 8. தனக்குப் பின்னால் நல்ல தலைவர்களை உருவாக்கியது. நேரு– இந்திரா–மோடி ஆகிய மூவருடன் காந்தியை ஒப்பிட்டுப்பார்த்தால் இந்த உண்மை நமக்கு உறைக்கும். 9. எதிர்த்தரப்பின் பார்வைக் கோணத்தையும் பார்க்க முன்வருகிற இயல்பு, எதிர்த்தரப்பைச் சேர்ந்தவர் என்பதால் அவர் மீது வெறுப்பு கொள்வதோ தன்னுடைய தரப்பு என்பதால் ஒருவருக்குச் சலுகை காட்டுவதோ அவரிடம் கிடையாது. 10. திறந்த புத்தகம் போன்ற வாழ்க்கை. அவர் வாழ்ந்த காலத்தில் அவர்தான் உலகிலேயே மிகவும் பிரபலமாக இருந்த மனிதர். ஆனால், அவரை யாரும் மிக எளிதாகச் சந்தித்துவிட முடியும், அவரை மிக எளிதாகக் கொன்றுவிட முடியும் என்ற நிலையில்தான் அவர் தன்னை வைத்திருந்தார். தன்னை இந்த அளவுக்கு உலகத்திடம் திறந்து காட்டிய வேறொரு ஆளுமை கிடையவே கிடையாது.

***தொகுப்பு : ஆசை, கோபால்***
***நன்றி : தி இந்து***
***17.01.2019***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூறாவது காந்தி ஆண்டை முன்னிட்டு 1968 ஒக்டோபர் காந்தீயத்தில் வெளிவந்த கட்டுரை மறுபிரசுரம் செய்யப்பட்டுள்ளது.

காந்தியடிகள் மகாத்துமாக்களிற் சிறந்த மகாத்துமா; வேதகால மகரிஷிகளோடு ஒப்பிடத்தக்கவர்; தந்திரங்களும் ஊழல்களும் தகடுதத்தங்களும் பலாத்காரமும் நிறைந்த அரசியலைச் சத்தியமும் அகிம்சையும் கொண்டு தூய்மை செய்த யுக புருஷர்; சமூகப் புரட்சி இயந்திரப் பெருக்கத்தாலோ பாரிய திட்டங்களினாலோ அமைவதில்லை; மனப்புரட்சி ஒன்றினாலேயே அமையும் எனக் கண்ட உத்தமர். அந்த மனப் புரட்சி கிராமங்களிலே ஊற்றெடுத்து நாடு முழுவதும் பரந்து பெருக வேண்டுமெனக் “கிராமத்துவம்” என்னும் புதியதொரு கொள்கையைக் கண்ட சமுதாயத் தொண்டர்; இன்று தோன்றும் பல பல அரசியற் சிக்கல்களுக்குக் கிராமத்துவம் என்னும் சமய சஞ்சீவியைக் காட்டிச் சென்ற தீர்க்கதரிசி – இவையும் இவைபோன்ற பலவுங் கூறி, காந்தியண்ணலின் பலமுகப்பட்ட ஆற்றல்களை, பண்புகளை பல பல கோணத்தில் நின்று போற்றிப் புகழ்ந்து பெருமையடைகிறது இந்த உலகம். அவ்வாறு புகழ்வதனால் தான் பெருமை பெற்று விடமுடியும் எனவும் நம்புகிறது இந்த உலகம்!

ஆனால், நிகழ்கால நிலையென்ன? காந்தி அண்ணலின் சிந்தனைகள், கொள்கைகள், செயல் முறைகள் கணிசமான அளவு நடைமுறையிற் சித்தித்தனவா? கிராமத்துவம் மலர்ந்து விட்டதா? கிராம ராஜ்யம் தோன்றிவிட்டதா? கிராம வாழ்விலே மனத் தூய்மையும் எளிமையும் இணைந்து விட்டனவா? கிராமங்கள் தன்னிறைவு பெற்றுவிட்டனவா? கிராமங்களின் மறுமலர்ச்சி நாட்டின் மலர்ச்சியாகப் பரிணமித்து விட்டதா? இந்நாளில் இவ்வாறு பல கேள்விகள் எழுகின்றன; நாட்டின் ஒவ்வொரு குடிமகனிடமும் இத்தகைய கேள்விகள் எழ வேண்டும்; எழச்செய்ய வேண்டும். அப்போதுதான் காந்தியண்ணல் எம்மிடையே எமது வாய் சொல்லில் வாழ்கிறாரா? எமது செயல் சிந்தனைகளில் வாழ்கிறாரா என்று பருமட்டாக ஆராய முடியும். நூறாவது காந்தி ஆண்டில் இத்தகைய ஆக்கபூர்வமான ஆய்வு அவசியமானதே.

இத்தகைய ஆய்வும் நூறாவது காந்தியாண்டை எந்நாளும் இல்லா வகையில், கிராம மக்களிடையே மனப் புரட்சியைத் தூண்டும் வகையில் பெரு விழாவாக நாட்டின் மூலை முடுக்கெங்கும் கொண்டாடுவதும் எத்துணை முக்கியமானதோ அத்தனை முக்கியமானது காந்தி நெறியைச் செயற்படுத்துவது. அதற்காகச் சொல் வீரர்களிலும் செயல் வீரர், உண்மைத் தொண்டர் பல்லாயிரவர் பல்லாயிரவராகத் திரளட்டும். இந்தக் காந்தீய நெறிச் செயல் வீரரின் தொண்டை எந்நாளும் இல்லாத வகையில் இன்று இந்நாடு எதிர்பார்க்கிறது. உணவுப் பற்றாக்குறை, விடம் போலேறும் வாழ்க்கைச் செலவு, வேலையில்லாத் திண்டாட்டம். மனிதனின் உழைப்புச் சக்தி வீணாகும் அவலநிலை போன்ற கேடுகள் இந்நாட்டைச் சூழ்ந்துள்ள இந்த நிலை நீங்கி சமுதாயம் வாழ, அதனங்கமான தனி மனிதன் வாழக் காந்தீய நெறித் தொண்டர்கள் பன்னீராயிறங் கோடியாகத் திரளட்டும்! அதாவது இந்நாட்டு மக்கள் ஒவ்வொருவரும் காந்தீய நெறித் தொண்டராக மாறட்டும்!

இதுவே காந்தியண்ணலுக்கு அவருடைய நூறாவது ஆண்டு நாளில் நாம் செய்யத்தக்க நல்ல பிரார்த்தனை; அமரரான அவர் மனம் குளிரத்தக்க நல்லதோர் அஞ்சலி.

## சங்கத்தின் புதிய நிர்வாக சபை தெரிவு

அகில இலங்கை காந்திசேவா சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் 11.08.2019 ஞாயிற்றுக் கிழமை திருநெல்வேலி இந்து வாலிபர் சங்க மண்டபத்தில் நடைபெற்றது. இதன்போது பின்வருவோர் சங்கத்தின் நடப்பாண்டுக்கான நிர்வாகிகளாக ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

| | | |
|---|---|---|
| தலைவர் | : | சோ. க. தம்பிப்பிள்ளை |
| உபதலைவர்கள் | : | பேராசிரியர் சு. மோகனதாஸ், கி. விக்னராஜா |
| பொதுச்செயலாளர் | : | செ. சுப்பிரமணியம் |
| துணைச் செயலாளர்கள் | : | சி. ஜெயசங்கர், சி. சிவரம்யா |
| பொருளாளர் | : | சி. சர்மிளா |

நிர்வாக சபை உறுப்பினர்கள்

சோ. செல்வராணி, ம. உமாசங்கர், இ. சுதன், இரா. செல்வராஜா, த. கண்ணபிரான், சி. சிவநேசன், ஜெ. கலைவாணி, கே. தேவிகா, தே. சுபாகரன், மு. பிறேம்குமார், சி. சண்முகநாதன், ம. சுஜீவன், நா. கிருஷ்ணபிள்ளை, ச. சாரங்கா, மு. தவேந்திரன், த. ஜெயதேவி, ஆ. நகுலேஸ்வரி, இரா. யசோதா

உள்ளகக் கணக்காய்வாளர்கள் : ம. சுஜீவன்
சி. ஜெயசங்கர்

## காந்தி சிறுவர் இல்ல நிர்வாகிகள்

கிளிநொச்சி உருத்திரபுரம் 8ஆம் வாய்க்காலில் அமைந்துள்ள காந்தி சிறுவர் இல்ல நிர்வாகிகளாக 11.08.2019 ஆந் திகதி நடைபெற்ற அ.இ.கா.சே. சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

| | | |
|---|---|---|
| தலைவர் | : | கி. விக்னராஜா |
| உபதலைவர் | : | ம. உமாசங்கர் |
| செயலாளர் | : | சோ. செல்வராணி |
| உப செயலாளர் | : | சி. சிவனேசன் |
| பொருளாளர் | : | இ. சுதன் |
| நிர்வாக உறுப்பினர்கள் | : | த. கண்ணபிரான், தே. சுபாகரன், மு. பிரேம்குமார், இரா. செல்வராஜா, ஜெ. கலைவாணி, கே. தேவிகா |

## காந்தி சிலைக்கு மாலை அணிவித்தல்

யாழ் இந்திய துணைத் தூதரகம் மற்றும் அகில இலங்கை காந்தி சேவா சங்கம் மற்றும் காந்தி அமைப்புக்களின் ஏற்பாட்டில் காந்திய டிகளின் 150 ஆவது பிறந்த தினத்தில் (02 ஒக்டோபர் 2019) வட மாகாணத்தில் ஆறு இடங் களில் மலர் மாலை அணி வித்து அஞ்சலி செலுத்தும் நிகழ்வு இடம் பெறவுள்ளது. பருத்தித்துறை பஸ் நிலையம், வல்வெட்டித் துறை சிவன் ஆலயம், வல்லிபுர ஆழ்வார் ஆலயம், யாழ் ஆஸ்பத்திரி வீதி, அரியாலை காந்தி சனசமூக நிலையம், முல்லைத்தீவு நகரம் ஆகிய இடங்களி லுள்ள காந்தி திருவுருவச் சிலைகளுக்கு மாலை அணிவிக்கும் நிகழ்வில் யாழ் இந்திய துணைத் தூதரக அதிகாரி களும், காந்தி சேவா சங்க முக்கியஸ்தர்களும் பொது மக்களும் கலந்து கொள்ள வுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சத்தியாகிரகத்திற்கு வளர்ந்து வரும் முக்கியத்துவம்

பேரா. முனைவர் இ.கி. இராமசாமி

கோரா அவர்களின் மகன்களில் ஒருவரான ஜி. விஜயம் காலந்தோறும் சத்தியாக்கிரகத்திற்குக் கிடைத்துவரும் முக்கியத்துவம் பற்றி ஓர் ஆராய்ச்சிக் கட்டுரை எழுதியுள்ளார். ("Non Violent struggles of the Twentieth Century : Retrospect and Prospect, Siby K. Joseph, John Moolakkattu and Bharat Mahodaya (Editors)" Institute of Gandhian Studies and Gandhi Peace Foundation, New Delhi, 2009) அந்தக் கட்டுரை காந்திய அமைதி நிறுவனம் வெளியிட்டுள்ள "20 ஆம் நூற்றாண்டு அகிம்சை வழிப்போராட்டங்களும் அவற்றின் எதிர்காலப் பயன்பாடும்" என்ற புத்தகத்தில் இடம் பெற்றுள்ளது. அந்தப் புத்தகத்திற்குக் குஜராத் வித்யாபீடத் துணைவேந்தராக இருந்த நாராயண தேசாய் அற்புதமான அணிந்துரை வழங்கியுள்ளார். 20 ஆம் நூற்றாண்டில் நிகழ்ந்த அகிம்சைப் போராட்டங்கள். 21 ஆம் நூற்றாண்டுக்கு நல்ல பாடமாக அமைந்துள்ளன என்று குறிப்பிட்டுள்ளார். அது கோராவின் மகன் எழுதிய கட்டுரையின் சாரமாக விளங்குகின்றது.

ஜி. விஜயம் தனது தந்தையார் கோராவைப் போலவே காந்தியவாதியாகவும் மனிதநேயம் மிக்க பகுத்தறிவு வாதியாகவும் சுதந்திரச் சிந்தனையாளராகவும் இருப்பதைக் காட்டுகின்றது அந்தக் கட்டுரை. அதன் தமிழாக்கத்தையும் இந்தக் கால கட்டத்தில் சேர்த்துப் படிப்பது பொருத்தமாகும். ஒரு குடும்பம் வழிவழியாகக் காந்தியத்தைக் கடைப்பிடித்துச் செயற்பட்டுப் பரப்புரை செய்து வருவது மிக இன்றியமையாத தகவல் ஆகும்.

வருங்காலச் சமுதாயம் அமைதியும் வளமும் பெற்று வாழ்வதற்குச் சென்ற நூற்றாண்டு, நல்ல படிப்பினைகளைக் கற்றுக் கொடுத்துள்ளது. சென்ற நூற்றாண்டில் நிகழ்ந்த உலகப் போர்களினால் ஏற்பட்ட உயிர்ச்சேதமும் பொருட்சேதமும் இந்த நூற்றாண்டில் ஏற்படவில்லை. அதற்கு முந்திய காலத்திலும் ஏற்பட்டதில்லை. பசி, பஞ்சம், பட்டினி, நோய் ஆயுதத் தயாரிப்பு, பதற்றம் ஆகியன இப்போது இருப்பதைவிடச் சென்ற நூற்றாண்டில் அதிகமாக இருந்தன. அப்படியான வன்முறை ஆதிக்கம் நிலவிய காலச்சூழலில் வன்முறையினை எதிர்த்து அகிம்சை வெற்றிகண்டுள்ளது. போர் மேகங்கள் சூழ்ந்து நின்ற காலத்திலேயே அகிம்சை வாதிகள், போரில்லாத அமைதிப் பாதையைப் போட்டுக் கொடுத்துச் சென்றுள்ளனர். அந்த அமைதிப் பாதையில் தான் இன்றைய அரசியல், சமூகம், பொருளாதாரம், பண்பாடு, அறிவியல் மாற்றங்கள் நிகழ்ந்து வருகின்றன. அகிம்சையின் உணர்வாகவும் வடிவாகவும் விளங்கி மகாத்மா காந்தியடிகளின் தாக்குரவு உலகமக்களிடம் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. அவருடைய அணுகுமுறைகளும் சிந்தனைகளும் போராட்ட முறைகளும் அழிக்க முடியாத பதிவுகளை ஏற்படுத்தியுள்ளன. காலனிய ஆட்சிக்கு எதிரான அவருடைய போராட்டங்கள் தனித்தன்மை வாய்ந்தவை. அவற்றின் மூலம் அதிகாரத்திற்கும் உரிமைக்கும் இடையேயுள்ள வேறுபாட்டை அவர் உலகிற்கு உணர்த்தியுள்ளார். அதனால் ஓர் அரை நூற்றாண்டு காலம் அவரே ஈடு இணையற்ற தலைவராக விளங்கினார். அவரோடு கருத்து வேறுபாடு கொண்டவர்களும் ஏன்? ஆங்கிலேயருங்கூட அவருடைய அறப்போர் முறையினை அங்கீகரித்தனர்; பாராட்டினர். அவர் புதுமையை நாடிய மேதை; அவருடைய செயற்பாடு அகிம்சைக்கு உருவம் கொடுத்தது. காந்தியடிகளின் அனுபவங்களை அவரைப் பற்றி எழுதப்பட்ட 100 புத்தகத் தொகுதிகளும் சொல்லும். அவை, ஒரு சுரங்கத்திலிருந்து நிலக்கரியை எடுத்துக் கோட்டைக்குக் கொண்டு செல்லுவது போலத் தோன்றுகின்றன.

காந்தியடிகளின் சகாப்தம், சத்தியாக்கிரகத்தை மக்கள் இயக்கமாகப் பார்த்தது. அவருக்குப் பின்பு அதன் இயக்கத்தில் கொஞ்சம் மாற்றம் காணப்படுகிறது. அன்று ஒடுக்கு முறைக்கும், அடக்கு முறைக்கும் எதிரானதாகப் பார்க்கப்பட்ட சத்தியாக்கிரகம் இன்று உரிமைக்குரலாக, சிலரது வாய்ப்பு வசதிக்காக கையாளப்படுகின்றது. நீதியைப் பெறுவதற்கும் உரிமைகளை அடைவதற்கும் ஊதிய உயர்வு பெறுவதற்கும் இன்றைய காலகட்டத்தில் சத்தியாக்கிரகம் செய்கின்றனர். மக்களாட்சி முறை நிலவுவதால் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றவும் அறப்போராட்டங்களைச் செய்கின்றனர். அதில் சில தீயவையும் கலந்து விடுகின்றன. அவை காந்தி கண்ட சத்தியாக்கிரகக் கோட்பாட்டிற்கே மாசு கற்பிக்கின்ற வகையில் முடிவுறுகின்றன. மக்களைத் திரட்டி அரசுக்கு எதிராக அவர்களைத் திருப்பி விடப் பெயரளவில் சத்தியாக்கிரகம் என்ற சொல்லாட்சியைப் பயன்படுத்துகின்றனர்; குரல் எழுப்புகின்றனர்; கோரிக்கை வைக்கின்றனர். அதில் போலித்தனங்களும் அடங்கியிருக்கின்றன.

சுதந்திர இந்தியாவில் இனியும் சத்தியாக்கிரகம் தேவைதானா? என்ற கேள்வி எழுகின்றது. நீதியும் நியாயமும் கேட்டு அறப்போரில் ஈடுபடும் குழுவினரோடு சில அரசியல் கட்சியினரும் கேடிகளும் நுழைந்து ஆதாயம் பார்த்து விடுகின்றனர். இன்றைய அறப்போராட்டங்களை ஒரு கட்டுக்குள் வைத்துக் கொண்டு நல்லவர்களால் போராட முடிவதில்லை. மேலும் இன்றுள்ள சமூக பொருளாதாரக் காரணங்களை முன்னிட்டுச் சத்தியாக்கிரகத்தைப் பயன்படுத்த முடியுமா? உணவுப் பிரச்சனையும் வேலையில்லாத் திண்டாட்டமும் தீர்ந்து சமத்துவ சமுதாயம் உருவாகிட, சத்தியாக்கிரகம் எந்த வகையில் உதவ முடியும்?

ஏழை எளிய மக்களைக் கவனிக்காமல், வசதி படைத்தவர்கள் மேலும் தங்கள் வசதியைப் பெருக்கிக் கொள்ளச் சத்தியாக்கிரகம் செய்கின்றனர். நினைத்ததைச் சாதித்துக் கொள்ளுகின்றனர். இது ஏற்புடையதா? காந்தியடிகள் பின்பற்றிய சத்தியாக்கிரகம் எல்லோருக்கும் பயன்பட்டதல்லவா?

அமைப்புச் சார்ந்த குழுவினர் செய்யும் அறப்போராட்டங்களால் வெற்றி கிடைக்கின்றது; அதே சமயம் அமைப்புச் சாராத குழுவினர் முதலில் அறப்போராட்டங்களில் இறங்குவதுமில்லை; இறங்கினாலும் வெற்றி பெறுவதுமில்லை. அதற்கு இந்திய விவசாயிகளே தக்க சான்றாகும். எனவே, நாடு சுதந்திரம் அடைந்த பின்னர் சத்தியாக்கிரகம் தேவையில்லை. வேண்டுமானால் காலத்துக்கு தக்கவாறு அதற்குப் புதுவடிவமும் அர்த்தமும் கற்பித்துக் கொள்ளலாம். மக்கள் தங்கள் பிரச்சனைகளை அரசாங்கத்தோடு பேசித் தீர்த்துக் கொள்ளலாம். மக்கள் மன்றத்திலும் சட்ட மன்றத்திலும் பிரச்சனைகளைப் பேசுவதற்கும் தீர்த்துக் கொள்ளுவதற்கும் வாய்ப்புக்கள் இருக்கின்றன. சில வகையான அறப்போராட்டங்களினால் நாட்டின் ஒரு பிரிவினர் மட்டுமே பங்கு பெறுகின்றனர். அந்தப் போராட்ட முறையினை நாம் வரவேற்கக் கூடாது. எல்லா வகையான சிந்தனையாளர்களும் (இடது சாரி, வலது சாரி) ஒன்று திரண்டு பங்கு பெறுகின்ற அறவழிப் போராட்டத்தையே மக்கள் ஆதரிக்க வேண்டும்.

கோவாவையும், கச்சத் தீவையும் மீட்கச் சத்தியாக்கிரகங்கள் நடந்தன; பலர் சிறைப்பட்டனர். அவை இரண்டு நாடுகளுக்கிடையிலான சிக்கல் பற்றியவை. அவற்றுக்காக நடந்த சத்தியாக்கிரகங்களை நாம் வரவேற்க முடியாது. ஒரு சமூகப் பிரச்சனையின் பொருட்டுத் தனிநபர் அறப்போராட்டம் செய்வதை வரவேற்கலாம். அதுதோற்றுப் போனாலும் தாழ்வில்லை (மதுவிலக்கு வேண்டிச் சசிபெருமாள் நடத்திய அறப்போராட்டம் இதற்குத்தற்க சான்று) முன்பு, தனி ஆந்திர மாநிலம் வேண்டி பொட்டி ஸ்ரீராமுலு அறப்போராட்டம் செய்து உயிர் நீத்தார். அதன் விளைவாக எழுந்த கிளர்ச்சி காரணமாக ஆந்திர மாநிலம் பிறந்தது. அது தனிமனிதப் போராட்டத்திற்குக் கிடைத்த வெற்றி. அதில் நியாயம் இருந்ததை அனைவரும் ஒப்புக் கொண்டனர். மக்களின் வெறுப்பும் விழிப்புணர்ச்சியும் அதில் பெரும் பங்கு வகித்தன.

இப்போது தேர்தலும் வாக்குச் சீட்டும் சத்தியாக்கிரகத்தின் மாற்று வடிவங்களாக வந்துவிட்டன. ஆட்சியாளர்களையும் கொள்கைகளையும் மாற்றுவதற்கு அவை போதுமானவை. தேர்தல் முடிவு, மக்கள் எதிர்பார்த்த வண்ணம் அமையாவிட்டால் மீண்டும் வாக்குச் சீட்டைத்தான் பயன்படுத்தியாக வேண்டும். அதுதான் மக்களாட்சி முறையைப் பாதுகாக்கின்ற வழிமுறையாகும். (Non - violent struggles are safety valves in democracy : P.33) எனவே அறப்போராட்டம் நாடு தழுவியதாக அமைய வேண்டும் சின்னச் சின்னப் பிரச்சனைகளுக்காக அதனை மேற்கொள்ளுவதை எற்கவியலாது. மாற்றத்தைக் கொண்டு வருவதற்குத் தேர்தல் முறைதான் தக்க வழிகாட்டி. அது காந்தியச் சத்தியாக்கிரகத்தின்பாற்பட்டது. எனவே காந்தியமே 21 ஆம் நூற்றாண்டுக்கும் இனிவரும் காலங்களுக்கும் கட்டாயத் தேவை ஆகின்றது என்ற கருத்தை முன்வைக்கின்றார் கோராவின் மகன் விஜயம்.

நன்றி

**சர்வோதயம் மலர்கிறது.**

**மே. 2019**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காந்தியம்தான் உலகு உய்ய உற்ற வழி

தொழிற்புரட்சியால் உதித்த முதலாளித்துவம் விளைவித்த கொடுமையை எதிர்த்து பொதுவுடைமை இயக்கம் உருவானது. எழுபது எண்பது ஆண்டுகளுக்குப் பிறகு அது முதலாளித்துவப் பாதையிலேயே செல்ல முற்பட்டு விட்டது. குவியல்முறை பொருளுற் பத்தி, குவியல்முறை அதிகாரம் என்று வந்து விட்ட பிறகு பொதுவுடைமையும் முதலாளித்துவ வழியில் சென்று விட்டது ஆச்சரியமில்லை. சோவியத் யூனியன் உடைந்து விட்டது. ருஷ்யாவிலும் சீனாவிலும் கோடீஸ்வரர்களின் எண்ணிக்கை கூடி வருகிறது. முதலாளித்துவ ஏகாதிபத்திய வல்லரசுகளோடு போட்டி போட்டு உலக வணிகத்தில் ஈடுபட்டு வருகின்றன.

இந்த நிலையில் முதலாளித்துவம் புதிய அவதாரம் எடுத்திருக்கிறது. உலகமயாதல், தங்கு தடையற்ற வாணிபம், என்றெல்லாம் முதலாளித்துவத்திற்கு மறுபிறவி கிடைத்திருக்கிறது. இதுவும் நீண்ட காலத்துக்குத் தாக்குப் பிடிக்க முடியாது. காரணம் எரிசக்தியும் மின் ஆற்றலும் குறைந்து கொண்டே வருகிறது. இது வெளிப்படுத்தும் கரியமில வாயு, மீதேன் போன்ற வாயுக்களால் புவி வெப்பம் கூடி வருகிறது. பருவநிலை மாறுபாடுகள், திடீர் வெள்ளம், திடீர் வறட்சி ஏற்பட்டு மக்களைப் பெரிதும் பாதிக்கும் நிலை ஏற்படும். பூமிக்கடியில் புதைந்திருக்கும் கனிம வளங்களை விரைவில் எடுத்துத் தங்கள் வாணிபத்தை வளர்க்க கார்பரேட் நிறுவனங்கள் முயன்று வருகின்றன. வருங்கால சமுதாயத்துக்கு நாம் விட்டுச் செல்லும் சொத்து வெறும் பாழ் நிலமாகத்தான் இருக்கும் அல்லது அணுமின் நிலையங்கள் உமிழும் மாசுபாடான குப்பைகளைத் தான் நமது சந்ததியினருக்கு நாம் விட்டுச் செல்வோம். அதில் உள்ள புளூட்டோனியக் கழிவு ஒரு லட்சம் ஆண்டுகளுக்கு வீரியமுடையதாக இருக்கும். 25000 ஆண்டுகளுக்கு சரிபாதி வீரியம் இருக்குமாம். இப்படி நஞ்சையே வருங்கால சந்ததிக்கு விட்டுச் செல்லும் அவலத்தில் நம் தொழில் நாகரிகம் இருக்கிறது.

இயற்கையில் கிடைக்கும் புதுப்பிக்கத்தக்க ஆற்றலை ஆங்காங்கே உருவாக்கித் தொழில்களை பரவல் முறையில் நடத்தி, உள்ளூர் மக்களுக்கு முழுநேர வேலைவாய்ப்பு அளித்து அதிகாரத்தையும் பரவல் முறையில் சமுத்திர அலைவட்டமாக உருவாக்க வேண்டும் என்று காந்தியடிகள் நூறு ஆண்டுகளுக்கு முன்னமேயே கூறினார்.

முதலாளித்துவத்துக்கும், பொதுவுடைமைக்கும் மாற்றுக் கருத்து காந்தியக் கருத்து. இதனை உலகத்திற்குக் கொடுக்க நமது அரசுகள் தவறி விட்டன. பொது மக்களாவது காந்தியத்தின் உன்னதத்தை உணர்ந்து கடைப்பிடித்தால்தான் உலகு உய்யும். இதற்குத் தகுந்தவாறு காந்திய நிர்மாணத் திட்ட நிறுவனங்கள் தங்கள் செயல்திட்டத்தை விரிவுபடுத்திப் புதிய தொழில்முறையையும் புதிய நாகரிகத்தையும் உருவாக்க, உலக அமைதிக்கு உறுதுணையாகச் செயல்படுவது காலத்தின் கட்டாயமாகி விட்டது.

நன்றி
**கிராமராஜ்யம்**
**15.03.2012**

## காந்தியக் கொள்கைகளால் பூமியைக் கட்டிக்காப்போம்

### [காந்திக்கு அகவை 150 சிறப்புக் கவிதை]

வாழ்க மகாத்மா காந்தியின் ஜீவாதாரக்கொள்கை எஞ்ஞான்றும்
வாழ்வுக் கனிசேர்க்கும் சத்தியம் அகிம்சை மார்க்கத்தை வெட்டிச்சாய்த்து
கீழ் செயற் கடிமையாகி கிழார் மனதை மழுங்கடித்தல் தகுமோநம்
காலடியில் உலகோர் மண்டியிடுங் காலம்வரும் திருந்தி வாழ்வோம்.

பிறவுயிர்களைத் துன்புறுத்திக் கொன்றவற்றின் புலால்தன்னைப் பிரியமுடன்
புசித்தின்புறும் கொலை வாழ்க்கையினை யின்னும் புறக்கணிக்காமை ஏனோ
நிற வாதத் திற்கப்பால் சீவகாருண்ணியம் நிலவச்செய்தவர் நோவதோ
நிலத்தோர் நம்மடியில் விழுங்காலம் நெருங்கிவரும் திருந்தி வாழ்வோம்

அபகரித் துணவுத் தேவையைப் பூர்த்தி செய்யும் வாழ்வுமொரு வாழ்வோ
இங்ஙனம் சுயநலமே கண்ணாக அலட்சியம் செய்கின்றோம் காந்தீயத்தை
அபராதந் தோய்ந்த கொள்ளை வாழ்க்கைதனை அகற்றிட தாமதமேன்
அகிலத்தார் நம் பாதம் தன்னில் விழுங்காலம் ஆடிவரும் திருந்தி வாழ்வோம்

முயற்சி வாழ்க்கைதான் மனிதவர்க்க முன்னேற்றத்திற்கு முதற்படியதன்
முக்கியத்துவத்தைப் புரியாமல் கடமையை மறந்தும் உரிமையை இழந்தும்
சுயவுற்பத்தி தேவைப்பூர்த்தியிலே சீர்கேட்டை எதிர் கொள்வதோ
சகத்தோர் நம்பதந்தன்னில் விழுங்காலம் சனிக்கும் திருந்தி வாழ்வோம்

குழு வாழ்க்கையே உன்னத வாழ்வுக் கடிகோலி வலுப்படுத்த வல்லது அதில்
கூழ்த்தேவை நிறைவெய்துவது கொடிகட்டிப் பறக்கும் பொதுவுடைமையிற்றான்
பழுத்துப் பரிமளிக்கும் கடமையுணர்வும் பூவில் பரம்புவதை உய்த்தறியலாம்
புவனத்தோர் நம்மடியிற் பணியுங்காலம் பவனிவரும் திருந்தி வாழ்வோம்

தாய்மை வாழ்க்கையே தலைசிறந்த வாழ்க்கை தரணியிலே காந்தித்
தாத்தா இதயத்தைத் தட்டிய இலட்சிய வாழ்க்கை பலன்கருதாச் சேவைத்
தூய்மை குன்றிட தீதிழைக்கும் துட்டர் தமக்குத் துணைபோதலென்னே
தரையர் நமதடிதன்னில் விழுந்தருணம் தாவி வரும் திருந்தி வாழ்வோம்

காட்டு விலங்குகளின் தரத்திற்குங் கீழ்ப்படுத்தி நம்முட்டலையெடுத்து நிற்கும்
கெட்டகுணம் தீச்செயலைக் களைந்து பிறர் நலத்தொண்டு தன்னை வளர்க்கதன்
பாட்டில் பண்பாடு துளிர்த்து விருத்தியாகும் கல்விப்புலம் பசுஞானத்தைப்
போக்க அறவோர் வகுப்புக்குயர்ந்து பூமியைக் கட்டிக் காப்போமே.

**கவிஞர் மணிமன்றன்.**
**யாழ்ப்பாணம**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வினோபா அடிகளின் அமுதத்துளிகள்

(2019 - 2020) செப்ரெம்பர் 11 வினோபா அடிகளின் 125 ஆம் ஆண்டு

உதவி.மு.சீ. தேவதாஸ்காந்தி (தமிழ்நாடு இயற்கை மருத்துவ சங்கம்)



ஆன்ம தரிசனம் அடைந்த பின் உலகியலிலும் (சம்சாரத்திலும்) தூய்மையான ஆனந்தம் உள்ளது என்ற அனுபவம் ஏற்படும். ஆனந்தத்தைத் தவிர வேறு ஒன்றும் இல்லை.

மானுட வாழ்வின் நோக்கம் முக்தி (விடுதலை). முக்தி என்றால் நாம் நம்மை மறப்பதும் நமது அகங்காரம் அற்றுப் போவதுமாகும்.

சமுதாயம் முழுவதற்காக நமது அகங்காரத்தை விடும்போது முக்தி, தியாகம், பக்தி, சன்னியாசம், துறவு எல்லாம் உண்டாகும்.

சத்தியத்தை நன்கு விளங்கிக்கொள்ள அல்லது அகிம்சை வழியில் எப்படிச் செல்வது என்பது பற்றிச் சிந்தனை செய்ய வேண்டுமாயின் திறந்த காற்று வெளியிலும், பரந்த வானத்தின் கீழாகவும் உலாவ வேண்டும்.

ஆத்ம சோதனைக்காக பக்தியின் பங்களிப்பான வடிவில் மௌனத்தை மேற்கொண்டால் அது உறுதியாக பயன்மிக்கது ஆகும்.

ஒரு செயலை மன ஒருமையுடன் செய்வது நமது தியானம், செயலை அன்புடன் செய்வது பக்தி, சிந்தித்துச் செயலைச் செய்வது ஞானம், சமநோக்குடன் செயலைச் செய்வது யோகம்.

# வாசகப் பிரியர்களே...




யாழ்ப்பாணத்தவரின் அறிவுப் பசியைப் போக்கும் நிலையமாக விளங்குவது யாழ்ப்பாணம் பொதுசன நூலகம். தென்னாசியாவின் புகழ்பெற்ற நூலகங்களில் ஒன்றாகவும் இது விளங்கி வருகின்றது. இந்நூலகத்தில் உசாத்துணைக்கு விசேட சேர்க்கைப்பகுதி, இரவல் வழங்கும் பகுதி, சிறுவர் பகுதி, பத்திரிகை வாசிப்பு பகுதி என்று பல பிரிவுகள் காணப்படு கின்றன. அதில் ஒன்றுதான் "இந்தியா கோனர்" இந்திய அரசின் உதவியுடன் அமைக்கப்பட்ட இப்பகுதியில் இந்திய நாட்டின் சகல துறைசார்ந்த தமிழ், ஆங்கில நூல்கள் நிரம்பிக் காணப்படுகின்றன. விசேடமாக காந்தி நூல்களும் பெருந் தொகையான அளவில் இப்பகுதியை அலங்கரிக்கின்றன. காந்திய நூல்களைப் படிக்க விரும்பும் ஆர்வலர்களுக்கு இது பெரும் வரப்பிரசாதமே.


## 30.01.2019 நடைபெற்ற காந்தியின் 71வது சிரார்த்த தின நிகழ்வு மற்றும் ஈருருளிப்பேரணி பதிவுகள் - யாழ்ப்பாணம்











அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் பணிகளுக்கு நிதி உதவி செய்ய விரும்பும் அன்பர்கள் சங்கத்தின் வங்கிக் கணக்குக்கு அனுப்பி உதவுக.



அகில இலங்கை காந்தி சேவா சங்கம்
சேமிப்புக் கணக்கு இலக்கம் : 1117599
இலங்கை வங்கி
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை D8 உருத்திரபுரம், கிளிநொச்சியிலுள்ள அகில இலங்கை காந்தி சேவா சங்கத்திற்காக திரு. சோ. க. தம்பிப்பிள்ளை அவர்களால் யாழ்ப்பாணம், கே.கே.எஸ் வீதி, இலக்கம் 717இல் அமைந்துள்ள தீபம் பதிப்பகத்தில் 2019 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 02 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
இதழாசிரியர் : எம்.ஷாந்தன் சத்தியகீர்த்தி B.E.A, PGDE, Dip.in Community Development& Management, M.A(Gandhian Thought)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org